# 11

# “நீங்கள் ஜெபம்பண்ண வேண்டிய விதமாவது”

## (மத்தேயு 6:9–15; லூக்கா 11:1–4)

*மத்தேயு 6ம் அதிகாரத்தில் இயேசு, “மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக” நீதியான செயல்களைச் செய்தலுக்கு எதிராக எச்சரித்து (வசனம் 1) மூன்று உதாரணங்களைக் கொடுத்தார்: ஏழைகளுக்குக் கொடுத்தல் (வசனங்கள் 2-4), ஜெபித்தல் (வசனங்கள் 5-15) மற்றும் உபவாசித்தல் (வசனங்கள் 16-18). ஜெபத்தின் மீதான பகுதியில் நாம், “கர்த்தரின் ஜெபம்” என்று அழைக்கப்பட்டுள்ள ஜெபத்தைக் கொண்டுள்ளோம் (வசனங்கள் 9-15). இவ்வசனப்பகுதிக்கு ஒரு முழுப்பாடத்தை அர்ப்பணிக்கும் அளவுக்கு இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை அதிகமாக உள்ளன. நம்மில் பலருக்கு இதன் வார்த்தைகள் நன்கு பழக்கமானவையாக உள்ளன:*

> Then [*எனவே*][1]
> *நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது:*
> *பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே*
> *உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.*
> *உம்முடைய ராஜ்யம் வருவதாக;*
> *உம்முடைய சித்தம் பரமண்டத்திலே செய்யப்படுகிறதுபோலப்*
> *பூமியிலேயும் செய்யப்படுவதாக.*
> *எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.*
> *எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல*
> *எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்*
> *எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல்,*
> *தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்,*
> *ராஜ்யமும் வல்லமையும் மகிமையும்*
> *என்றென்றைக்கும் உம்முடையவைகளே ஆமேன், என்பதே (வசனங்கள் 9-13).*

*பிந்திய ஒரு சந்தர்ப்பத்தில், “அவர் ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தபின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும் என்றான்” (லூக்கா 11:1). அதற்கு இயேசு இந்த ஜெபத்தின் சிறுவடிவத்தைக் கொண்டு பதில் அளித்தார்:*

> *... நீங்கள் ஜெபம்பண்ணும்போது:*

*பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே*
*உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.*
*உம்முடைய ராஜ்யம் வருவதாக;*
*உம்முடைய சித்தம் பரமண்டத்திலே செய்யப்படுகிறதுபோலப்*
*பூமியிலேயும் செய்யப்படுவதாக:*
*எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்றும் எங்களுக்குத் தாரும்;*
*எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்;*
*நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே;*
*எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்,*
*தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், என்று சொல்லுங்கள் …*
*(லூக்கா 11:2-4).*

நமது படிப்பு, இந்த ஜெபத்திற்கு மத்தேயு 6ம் அதிகாரத்தில் தரப்பட்டுள்ள வடிவத்தின் மீது மையங்கொண்டிருக்கும், ஆனால் அவ்வப்போது நான் லூக்கா 11ல் உள்ளதைக் குறிப்பிடுவேன். நாம் இந்த ஜெபத்தை ஆராய்வதற்கு முன்னர், சில விஷயங்களைக் குறிப்பிட என்னை அனுமதியுங்கள். முதலாவது, மத்தேயு 6ம் அதிகாரத்தில் உள்ள இந்த ஜெபமானது சடங்காச்சாரமான ஜெபமாக இருக்க வேண்டும் என்ற நோக்கங் கொண்டதல்ல. மத்தேயு 6:9-15க்கு முந்திய வசனங்களில் இயேசு, "அதிக வசனிப்பு"க்கு எதிராக எச்சரித்தார் (வசனம் 7). மற்றும் கர்த்தர் "நீங்கள் இவ்வாறு ஜெபியுங்கள்" (வசனம் 9அ) அல்லது "நீங்கள் ஜெபம்பண்ண வேண்டிய விதமாவது" (KJV) என்றே கூறினார், அவர் "இதே வார்த்தைகளை மிகச்சரியாகப் பயன்படுத்தி ஜெபியுங்கள்" என்று கூறவில்லை. LB பொழிப்புரை வேதாகமத்தில், "இந்த வரிகளின் துணையுடன் ஜெபியுங்கள்" என்றுள்ளது. இயேசு இந்த ஜெபத்தைப் பிற்பாடு மீண்டும் உரைத்தபோது (லூக்கா 11), அவர்தாமே இதே வார்த்தைகளைப் பயன்படுத்தவில்லை. மத்தேயு 6ல்[2] அவர் நாற்பத்தி ஐந்து வார்த்தைகளைப் பயன்படுத்தினார், மற்றும் லூக்கா 11ல்[3] அவர் முப்பத்து எட்டு வார்த்தைகளையே பயன்படுத்தினார்.

இரண்டாவதாக, "கர்த்தரின் ஜெபம்" என்ற நன்கு பழக்கமான தலைப்பானது மிகச்சிறந்த குறிப்புப் பெயராக இருப்பதில்லை என்று கருத்துத் தெரிவிக்க என்னை அனுமதியுங்கள். இதற்கு இந்தத் தலைப்பானது, அறியப்படாத ஒரு கல்வியாளரால் இருண்ட யுகத்தில் தரப்பட்டது, மற்றும் இந்தச் சொற்றொடர் அப்படியே இதனுடன் நிலைத்து விட்டது. இருப்பினும் இயேசு தாமே இந்த ஜெபத்தை எப்போதாவது செய்திருந்தார் என்பதற்கான பதிவு எதுவும் இருப்பதில்லை.[4] "சீஷர்களின் ஜெபம்" என்பதே மிகச்சிறந்த சொல்விளக்கமாக இருக்கும். "மாதிரி ஜெபம்" என்பது எனக்குப் பிரியமான குறிப்புப் பெயராக உள்ளது.

இந்த ஜெபமானது பல அம்சங்களில் மாதிரியாக உள்ளது. *பரப்பெல்லையில்* இது மாதிரியாக உள்ளது. இது தேவனுடைய மாபெரும் தன்மையை ஒப்புக்கொள்ளுதலைக் கொண்டுள்ளது. இது இராஜ்யம் பற்றிய அக்கறையையும் உலகத்தில் உள்ளவர்கள் எல்லாரையும் பற்றிய அக்கறையையும் வெளிப்படுத்துகிறது. இது தனிப்பட்ட தேவைகளைக்கூடத் தொடுகிறது. மற்றும் இந்த ஜெபமானது *செறிவு* மற்றும் *எளிமை* ஆகியவற்றில் மாதிரியாக உள்ளது. மத்தேயு சுவிசேஷத்தில் இது ஐந்து வசனங்களில் கூறி முடிக்கப்படுகிறது மற்றும்

லூக்கா சுவிசேஷத்தில் இது மூன்று வசனங்களில் கூறி முடிக்கப்படுகிறது. இதன் நீண்ட பதிப்பை உரக்க வாசித்து முடிக்க இருபது வினாடிகளே ஆகிறது. இது மற்ற வழிகளிலும் மாதிரியாக உள்ளது.

## இதன் நோக்குதலில் மாதிரி (6:9)

எடுத்துக்காட்டாக இந்த ஜெபம் இதன் நோக்குதலில் மாதிரியாக உள்ளது. முதலாவதாக இது *தேவனை* நோக்கி ஏறெடுக்கப்படுகிறது: "பரமண்டலங்களிலிருக்கிற *எங்கள் பிதாவே*" (வசனம் 9ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நாம் - மரியாளை நோக்கியோ அல்லது பரிசுத்தர் என்னப்படும் ஒருவரை நோக்கியோ அல்ல ஆனால் - தேவனை நோக்கி ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய *தேவனை* ஸ்தோத்திரிக்க" வேண்டும் என்று பவுல் கூறினார் (எபேசியர் 5:20; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மீண்டுமாக நாம், நமது *பிதாவாக* இருக்கிற தேவனை நோக்கி ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர் ஒரு நபர்த்துவமற்ற தேவனாக அல்ல, ஆனால் அக்கறை கொள்கிற மற்றும் தேவையானவற்றை அருளுகிற பிதாவாக இருக்கிறார். மற்றும் நாம் *நமது* பிதாவாக உள்ள தேவனை நோக்கி ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அது ஒரு துறவியின் ஜெபமாக இருப்பதில்லை; அது ஒரே ஒரு பிள்ளையின் ஜெபமாக இருப்பதில்லை. "எங்கள் பிதாவே" என்ற சொற்றொடர், நமது பொதுவான சகோதரத்துவத்தை ஒப்புக்கொள்வதாக உள்ளது. நாம் "நமது பிதாவை" நோக்கி ஜெபிக்கும்போது, நாம் குடும்ப விஷயங்களைக் கலந்துரையாட ஒன்று கூடியுள்ளதை சுட்டிக்காண்பிக்கிறோம்.

இந்த ஜெபமானது தனது நோக்குதலில் *பரலோகத்தை* நோக்கி ஏறெடுக்கப்படுவதாலும் இது, மாதிரியாக உள்ளது: "*பரமண்டலங்களிலிருக்கிற* எங்கள் பிதாவே." இந்த உலகமானது தேவனுடைய படைப்பாகவும் உடைமை யாகவும் உள்ளது, ஆனால் இது அவரது இல்லமாக இருப்பதில்லை. நமது தேவபக்தியானது பரலோகத்தை மையங்கொண்ட தேவபக்தியாக உள்ளது. இயேசு பரலோகத்தில் இருந்து வந்தார், அவர் மீண்டும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார். இப்போது அவர் பரலோகத்தில் தேவனுடைய வலதுபுறத்தில் இருந்து, நமக்காக வேண்டுதல் செய்து கொண்டு இருக்கிறார். ஒருநாளிலே அவர், தமக்குச் சொந்தமானவர்களைக் கூட்டிச்சேர்க்கப் பரலோகத்தில் இருந்து வருவார். பின்பு அவர்கள் அவருடன் பரலோகத்தில் நித்தியகாலத்தையும் செலவிடுவார்கள். பவுல், "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது" என்று எழுதினார் (பிலிப்பியர் 3:20). இயேசு, தமது சீஷர்களிடத்தில் "உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்" என்று கூறினார் (லூக்கா 10:20) மற்றும் "பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்" என்று அவர்களுக்கு அறைகூவல் விடுத்தார் (மத்தேயு 6:20).

## இதன் பயபக்தியில் மாதிரி (6:9)

இந்த ஜெபமானது தனது பயபக்தியிலும் மாதிரியாக உள்ளது. தேவன் ஒரு தற்செயலான நண்பராக இருப்பதில்லை; அவர் நமது பிதாவாக இருக்கிறார் -

மற்றும் அவரது நாமம் பரிசுத்தமானதாக உள்ளது. இந்த ஜெபம் பின்வருமாறு தொடருகிறது: "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" (வசனம் 9இ; காண்க லூக்கா 11:2ஆ). "பரிசுத்தப்படுவதாக" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*hagiazo* என்ற) வார்த்தை, "பரிசுத்தம்" என்பதற்கான (*hagios* என்ற) கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது, இது "பரிசுத்தமானது என்ற வகையில் மதித்தல் அல்லது பயபக்தி செலுத்துதல்" என்று அர்த்தப்படுகிறது.[5] பழைய ஏற்பாட்டில் சங்கீதக்காரர், "அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது" என்று எழுதினார் (சங்கீதம் 111:9). அது போலவே மோசே, "உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக" என்று கட்டளையிட்டார் (யாத்திராகமம் 20:7அ).

தேவனுடைய நாமம் அவரது இருப்பு யாவற்றிற்குமாக நிலைநிற்கிறது. டி மார்ட்டின் லாயிட் - ஜோன்ஸ் அவர்கள், "நாம் தேவனுடைய நாமத்தை வழங்கும் போதெல்லாம் நமது கால்களில் இருந்து நமது காலணிகளைக் கழற்றிவிட வேண்டும் என்பதில் ஒரு கருத்து உள்ளது" என்று எழுதினார்.[6] மாதிரி ஜெபமானது, புதிய ஏற்பாட்டின்கீழ் நாம் இன்னமும், கர்த்தருக்கு முன்பாகப் பய உணர்வின் ஆழ்ந்தறிவான கருத்துடன் வரவேண்டும் என்பதைத் தெளிவாக்குகிறது.

## இதன் வலியுறுத்தத்தில் மாதிரி (6:10)

இப்போது குறிப்பிடப்பட்ட பயபக்தியானது, இந்த ஜெபத்தில் உள்ள வேண்டுகோள்களுக்கு நாம் வருகையில், அவற்றிற்கேற்ற தொனியை அமைக்கிறது. சுயத்தின் மீதல்ல ஆனால் தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் மீதே தொடக்க அக்கறை வெளிப்படுத்தப்படுகிறது: "உம்முடைய ராஜ்யம் வருவதாக" (வசனம் 10அ; காண்க லூக்கா 11:2இ). "இராஜ்யம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட (*basileia* என்ற) வார்த்தை, "இராஜரீகம், இராஜரீக அதிகாரம், ஆளுகை" என்பதைக் குறிக்கிறது. பேச்சு உருவகம் என்ற வகையில் இது, "ஒரு அரசர் ஆளுகை செய்யும் எல்லை அல்லது மக்கள்" என்பதைக் குறிக்கிறது.[7] தேவனுடைய இராஜ்யம் என்பது தேவனுடைய ஆளுகையைக் குறிக்கிறது. "உம்முடைய ராஜ்யம் வருவதாக" என்ற வார்த்தைகள் "இன்னும் அதிகம் அதிகமான மக்கள், தங்கள் இருதயங்களில் தேவனைத் தங்கள் அரசராகக் கிரீடம் சூட்டுவார்களாக" என்று அர்த்தப்பட முடியும். இந்தக் கருத்தில் இது, இந்த ஜெபத்தின் அடுத்த வேண்டுகோளைப் போன்றதாகவே உள்ளது. "உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" (வசனம் 10ஆ).

இருப்பினும், மலைப்பிரசங்கத்தின் சந்தர்ப்பப் பொருளை மறந்துவிட வேண்டாம். அந்தப் பிரசங்கத்தை இயேசு பிரசங்கிப்பதற்குச் சற்று முன்னர், அவர் "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கித்தபடி கலிலேயா முழுவதிலும் பயணம் செய்திருந்தார் (4:17). "இராஜ்யம்" என்பது, யூதர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மேசியாத்துவ இராஜ்யமாக இருந்தது. அந்த இராஜ்யமானது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு பின் வந்த, யூதர்களின் முதல் பெந்தெகொஸ்தே நாளில் நிலைநாட்டப்பட இருந்தது. இதை "சபை" என்று நிருபங்கள் வழக்கமாக அழைக்கின்றன. மேசியாத்துவ இராஜ்யம் மீதான சில திறவுகோல் வசனங்களை

*ஆழ்ந்து சிந்தியுங்கள்:*

- *ரோமப் பேரரசின் நாட்களில் மேசியாத்துவ இராஜ்யம் வரும் என்று தானியேல் வாக்களித்திருந்தார் (காண்க தானியேல் 2:44).*[8]
- *ரோமர்கள் உலகத்தை ஆண்டபோது, யோவான் ஸ்நானனும் பின்பு இயேசுவும் வந்து, "பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கித்தனர் (மத்தேயு 3:2; 4:17).*
- *செசரியாவில் இருந்த பிலிப்பி நகரில் இயேசு, தமது இராஜ்யத்தை நிலைநாட்டுதல் பற்றிப் பேசி, அதைத் தமது சபை என்று குறிப்பிட்டார் (மத்யே 16:18, 19).*
- *இராஜ்யமானது கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலர்களின் வாழ்நாள் காலத்திலேயே வரும் என்றும் அது "பலத்தோடே வரும்" (மாற்கு 9:1) என்றும் அவர்களிடம் கிறிஸ்து கூறினார். பிற்பாடு அவர், பரிசுத்த ஆவியானவர் வரும்போது அந்த பலம் வரும் என்று கூறினார் (நடபடிகள் 1:6-8).*
- *பரிசுத்த ஆவியானவர், இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப் பின்வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் வந்தார் (நடபடிகள் 2:1-4). வல்லமை வந்தது மற்றும் இராஜ்யம்/சபை நிலைநாட்டப்பட்டது.*

*பெந்தெகொஸ்தே நாளில் இருந்து, இராஜ்யம்/சபை இருந்து வந்ததாகப் பேசப்பட்டது. மக்கள் இரட்சிக்கப்பட்டபோது, தேவன் அவர்களை "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு" உட்படுத்தி (கொலோசெயர் 1:13), அவர்களைத் தேவன் தமது சபைக்குள் சேர்த்தார் (காண்க நடபடிகள் 2:47). கிறிஸ்தவர்கள் ஒரு அசைவில்லாத இராஜ்யமாகிய (எபிரெயர் 12:28), பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்ள முடியாத சபைக்குள் (மத்தேயு 16:18) இருக்கின்றனர்!*

*இயேசு, தமது சீஷர்கள் "உம்முடைய ராஜ்யம் வருவதாக" என்று ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டபோது, அவர் தமது சீஷர்களை, சபை உள்ளடங்கிய தேவனுடைய மாபெரும் நித்திய வடிவமைப்பில் பங்கேற்பவர்களாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார் (காண்க எபேசியர் 3:10, 11).*

*[கர்த்தருடைய] ஜெபத்தின் இந்தப் பகுதியை நாம் இன்றைய நாட்களில் ஜெபிக்க வேண்டுமா? J. W. மெக்கார்வீ அவர்கள், "நாம், 'உம்முடைய ராஜ்யம் வருவதாக' என்ற வேண்டுகோளை விட்டுவிட வேண்டும்; ஏனெனில், இராஜ்யம் ஏற்கனவே வந்துள்ளது என்ற நிலையில் இந்த வேண்டுகோளின் கருத்து ஏற்பில்லாததாகவும், இவ்வார்த்தைகளை இன்னமும் அப்படியே தக்கவைத்திருப்பது தக்கது அல்லாததாகவும் உள்ளது, இருப்பினும் இவற்றை இயேசு பயன்படுத்திய கருத்திலிருந்து சற்று மாறுபட்ட கருத்தில் இணைப்பது ஏற்புடையதல்ல" என்று எழுதினார்.*[9] *இருப்பினும் இவ்வார்த்தைகளை ஏதேனும் ஒரு வகையில் தகுதிப்படுத்துவது சாத்தியமாக உள்ளது. நாம், "உம்முடைய இராஜ்யம் உலகம் முழுவதிலும் வருவதாக" என்று, அல்லது "உம்முடைய இராஜ்யம் எல்லா மனிதர்களின் இருதயங்களிலும் வருவதாக" என்று கூறலாம்.*

இந்த வேண்டுகோளை நாம் நமக்கு உரியதாக்கி, "உமது ஆளுகையானது எனது இருதயத்தில் இன்னும் முழுமையாக நிலைநாட்டப்படுவதாக" என்று கூறலாம். இவ்விஷயத்தை எச்சரிக்கையாகக் கவனியுங்கள், ஏனெனில் இவ்வார்த்தைகளை நாம் எந்தத் தகுதிப்படுத்துதலும் இன்றிப் பயன்படுத்தினால், கிறிஸ்துவின் இராஜ்யம் இன்னும் நிலைநாட்டப்படவில்லை என்று நம்புகிற, ஆயிரமாண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்களுக்கு நாம் நற்சான்று கொடுத்தவர்களாகக் காணப்படுவோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்களும் நானும் இராஜ்யத்தை/சபையைப் பற்றி *அக்கறை கொண்டு* இருக்க வேண்டும் - மற்றும் அதன் நலத்தை நமது ஜெபங்களில் உள்ளடக்க வேண்டும் - என்று இயேசுவின் மாதிரி ஜெபம் போதிக்கிறது. நாம், நமது சமூகத்திலும் உலகம் முழுவதிலும் உள்ள சபைக்காக ஜெபிக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் நாம் *இன்னமும்* தேவன், "கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாநி தீர்மானத்தின்படியே" "அவருடைய அந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக" என்ற அவரது "அநாதி தீர்மானம்" என்ற தேவனுடைய மாபெரும் திட்டத்தில் பங்கேற்பவர்களாக இருக்க முடியும் (எபேசியர் 3:10, 11)!

## இதன் அக்கறையில் மாதிரி (6:10)

அடுத்த வேண்டுகோள், ஆவிக்குரிய விஷயத்தில் வலியுறுத்தத்தைத் தொடர்கிறது: "உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" (வசனம் 10ஆ). பூமியில் உள்ள ஒவ்வொருவரும் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற விருப்பம் வெளிப்படுத்தப்படுகிறது. இப்படிப்பட்ட சாத்தியக்கூற்றினை ஆழ்ந்து சிந்திப்பதுகூட நம்மைத் தள்ளாடச் செய்கிறது. தேவனுடைய அரியணைக்கு முன்பாகத் தூதர்களும் பிரதான தூதர்களும் நிற்பதைச் சித்தரித்துப் பாருங்கள். அவர்கள் அவரது கட்டளைகளைக் கேள்விப்படவும் அவற்றிற்குக் கீழ்ப்படிய உணர்வுடன் தயாராக இருக்கவும் பேரார்வம் கொண்டிருப்பதைக் காணுங்கள். தேவனுடைய சித்தமானது இவ்வாறே பூமி முழுவதிலும் கீழ்ப்படியப்பட்டால், அது அற்புதமானதாக இராதா? தேவனுடைய சித்தமானது அவரது வசனத்தில் அடிப்படையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது; ஆகவே, ஜெபத்தின் இந்தப் பகுதி பதில் அளிக்கப்படுவதற்கு, நாம் வசனத்தைப் பூமி முழுவதற்கும் எடுத்துச் செல்ல வேண்டும் (மத்தேயு 28:18-20; மாற்கு 16:15, 16). பின்பு நாம், கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி எங்குமுள்ள மக்கள் யாவரையும் ஊக்கப்படுத்த வேண்டும்.

இருப்பினும் ஜெபத்தின் இப்பகுதியினுடைய முதன்மை மதிப்பானது, தேவனுடைய சித்தம் பற்றிய நமது சொந்த எண்ணப்போக்குகளைப் பரிசீலனை செய்யும்படி நம்மைக் கட்டாயப்படுத்துவதாக உள்ளது. சிலர் தங்கள் வாழ்விற்கான தேவனுடைய சித்தம் பற்றிச் சந்தோஷம் கொள்வதில்லை. வாழ்வு என்ற பெரிய நாடகம் பற்றி, "மனிதர்கள் தங்களுக்கு, பரலோகத்தின் அரசரால் கையளிக்கப்பட்ட பாத்திரப்படைப்புகளை விரும்புவதில்லை" என்று கூறப்பட்டுள்ளது. செயல்விளைவில் சிலர், "பூமியில் *எனது* சித்தம் செய்யப்படுவதாக" என்று ஜெபிக்கின்றனர். வில்லியம் பார்க்ளே அவர்கள், "ஜெபம் என்பது நமது விருப்பங்களுக்குத் தேவனுடைய சித்தத்தை

வளைக்கும் முயற்சியாக ஒருக்காலும் இருக்கக் கூடாது; ஜெபம் என்பது எப்போதுமே, நமது சொந்த விருப்பங்களைத் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியச் செய்யும் முயற்சியாக இருக்க வேண்டும்" என்று எழுதினார்.[10]

## இதன் வரையறையில் மாதிரி (6:11)

இந்த ஜெபத்தின் பாதிப்பகுதி வரையிலும் நாம் பார்த்திருக்கிறோம், இது வரையிலும் தனிப்பட்ட வேண்டுகோள் எதுவும் இருக்கவில்லை. இது நமது ஜெபங்களில் இருக்க வேண்டிய வலியுறுத்தம் என்ன என்பதைப் பற்றி நமக்குக் கூறவேண்டும். இருப்பினும் நமது இருதயங்கள் தனிப்பட்ட வேண்டுகோள்களுக்குத் தயாராக இருக்க வேண்டும். அடுத்ததாக நாம், "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று[11] எங்களுக்குத் தாரும்" என்று வாசிக்கிறோம் (வசனம் 11). லூக்கா சுவிசேஷத்தில், "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை *அன்றன்றும்* எங்களுக்குத் தாரும்" என்றுள்ளது (லூக்கா 11:3; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இந்த ஜெபத்தில் உள்ள *வரையறையைக்* கவனியுங்கள்: இது ஒரு கேக் அல்லது விரும்பத்தக்க இனிப்புக்கான வேண்டுகோளாக இருப்பதில்லை,[12] ஆனால் அப்பத்திற்கான வேண்டுகோளாக இருக்கிறது. இது ஒரு மாதத்திற்குத் தேவையான அப்பத்திற்கான வேண்டுகோளாக இருப்பதில்லை, ஆனால் அந்த நாளுக்குப் போதுமான அப்பத்திற்கான வேண்டுகோளாக இருக்கிறது. "இந்த ஜெபமானது நமது பேராசைகளுக்கானதாக இராமல், நமது தேவைகளுக்கானதாக உள்ளது."[13]

நாம், வாழ்வின் அத்தியாவசியத் தேவைகளில் சந்தோஷம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பது, ஜெபத்தின் இந்தப் பகுதியில் உள்ள பாடங்களில் ஒன்றாக உள்ளது. உணவு என்பது நாம் கொண்டிருக்க வேண்டிய ஒரு சில விஷயங்களில் ஒன்றாக உள்ளது. மற்ற விஷயங்களைக் கேட்பதில் தவறில்லை, ஆனால் நமது சந்தோஷமானது பொருட்களைச் சேர்த்துக் குவிப்பதை சார்ந்திருக்கக் கூடாது. பவுல், "உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்" என்று எழுதினார் (1 தீமோத்தேயு 6:8).

ஜெபத்தின் இந்தப் பகுதியில் நாம் மற்ற பாடங்களைக் காணுகிறோம். எடுத்துக்காட்டாக, தேவன் நமது ஆசீர்வாதங்களின் ஆதாரமூலமாக இருக்கிறார் என்று நமக்கு நினைவூட்டப்படுகிறது: நமது அன்றாட உணவு போன்ற எளிய மற்றும் அடிப்படையான விஷயத்திற்கு நாம் அவரிடத்தில் ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் "நான் என்ன செய்தேன் பாருங்கள்" என்றல்ல, ஆனால் அதற்கு மாறாக, "தேவன் எனக்கு என்ன செய்திருக்கிறார் என்று பாருங்கள்" எனக் கூற வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் கொண்டுள்ள ஒவ்வொன்றும் வழியில் நாம் பொறுக்கி எடுத்துக் கொண்டதாகவே உள்ளது, ஆனால் பொறுக்கி எடுத்துக்கொள்ளும்படி அதை அங்கே போட்டவர் தேவனாக இருக்கிறார். நாம் நமது அன்றாட உணவிற்காக உழைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் (காண்க 2 தெசலோனிக்கேயர் 3:10), ஆனால் அந்த ஆசீர்வாதத்தின் நிறைவான ஆதாரமூலத்தை நாம் அங்கீகரிக்க வேண்டியவர்களாக இன்னமும் இருக்கிறோம்:

> ஒரு முழு ரொட்டிக்குப் பின்னால் பனிபோன்ற மாவு உள்ளது

*மாவுக்குப் பின்னால் மாவாலை உள்ளது;*
*மாவாலைக்குப் பின்னால் கோதுமையும்*
*சாரல் மழையும்*
*சூரியனும் பிதாவின் சித்தமும் உள்ளது.*[14]

மேலும், சுயநலமற்று இருக்க வேண்டியதன் அவசியத்தையும் 11ம் வசனம் மறைமுகமாக உணர்த்துகிறது. நாம், "*எனது* அன்றாட உணவிற்காக" என்றல்ல ஆனால் "*எங்கள்* அன்றாட உணவிற்காக" என்று ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த ஜெபம் முழுவதிலும், கிறிஸ்தவர்களின் சமூகத்தின்மீதான வலியுறுத்தம் ஒன்று உள்ளது. இந்த ஜெபத்தைத் திரும்பவும் வாசியுங்கள். "நான்" என்ற தன்மைப் பெயர்ச்சொல் இதில் காணப்படுவதில்லை. இந்த ஜெபம், பிறருக்கான அக்கறை பெருமளவு நிரம்பியதாக உள்ளது.

## இதன் தாழ்மையில் மாதிரி (6:12)

இன்னொரு தனிப்பட்ட வேண்டுதல் இந்த ஜெபத்தில் அடுத்து உள்ளது: "எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" (வசனம் 12ஆ). "கடன்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*opheilema* என்ற) கிரேக்க வார்த்தை, கடன்பட்டுள்ளதைக் குறிக்கிறது; இருப்பினும் இங்கு நிதிநிலை சார்ந்த கடன் என்று அல்ல, ஆனால் ஆவிக்குரிய கடன் ஒன்றே குறிப்பாக உள்ளது - இது நாம் ஒருக்காலும் திருப்பிச் செலுத்த இயலாத கடனாக உள்ளது. புதிய ஏற்பாட்டில் இந்த கிரேக்க வார்த்தை ஒருமையில் பயன்படுத்தப்படும்போது, இது ஒரு "குற்றம், தவறு, பாவம்" என்பதைக் குறிக்கப் பயன்படுகிறது.[15] லூக்கா சுவிசேஷத்தில் "எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்" என்றுள்ளது (லூக்கா 11:4அ).[16] பரிசுத்தமான தேவனுக்கு முன்பாக நாம் நின்று, நாம் பாவிகளாக இருக்கிறோம் என்று ஒப்புக்கொண்டு நம்மை மன்னிக்கும்படி தேவனிடத்தில் வேண்டிக் கேட்கிறோம். இது நமது பெருமை உணர்வின் இருதயம் போன்ற மையப் பகுதியில் பலமாகத் தாக்குகிறது.

இந்த வேண்டுகோளின் முந்திய பகுதியானது நமது பெருமை உணர்வை இன்னும் கூர்மையாகத் தாக்குகிறது: "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல" (வசனம் 12அ).[17] மன்னித்தல் என்பது அவ்வளவு கடினமானதாக இருக்கக் கூடும்! C. S. லூயிஸ் என்பவர், "ஒவ்வொருவருமே, மன்னிப்பதற்கு ஏதேனும் விஷயத்தைத் தாம் கொண்டிராத வரையில், மன்னித்தல் என்பது அற்புதமான ஒரு கருத்து என்று கூறுகின்றனர்" என்று கூறினார்.[18] மீறுதல் எவ்வளவு பெரிதாக உள்ளதோ, அவ்வளவுக்கு மன்னித்தல் என்பது கடினமானதாக உள்ளது. யாரேனும் ஒருவர் நமது மனதைப் புண்படுத்தும்போது, நமது தன்முனைப்பும் பெருமை உணர்வும் காயப்படுத்தப்படுகின்றன. நாம், "என்னால் அவரை (அல்லது அவளை) ஒருக்காலும் மன்னிக்க முடியாது!" என்று நினைக்கச் சாயலாம். செயல்விளைவில், "இது முக்கியமானதே அல்ல. இது என்னை விட்டுக் கடந்து செல்ல நான் அனுமதிக்க வேண்டும்!" என்று கூறுதல் எவ்வளவு கடினமானதாக உள்ளது!

சிலவேளைகளில் என்னிடத்தில், "ஒருவர் மனந்திரும்பி மன்னிப்புக் கேட்காதிருந்தால் அவரை நான் மன்னிக்க முடியுமா?" என்று கேட்கப்பட்டுள்ளது. சிலர் லூக்கா 17:3ஐ சுட்டிக்காண்பித்து, அத்துடன்,

நாம் மனந்திரும்பாத வரையில் தேவன் நம்மை மன்னிப்பதில்லை என்ற உண்மையையும் சுட்டிக்காண்பிக்கின்றனர். இருப்பினும் நான், நமது இருதயங்களின் *எண்ணப்போக்குப்* பற்றிப் பேசுவதைக் காட்டிலும் அதிகமாக, ஐக்கியத்தை மீளக்கட்டுவித்தல் பற்றிப் பேசுவதில்லை. இயேசு சிலுவையின் மீது இருந்த வேளையில் கூட, "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று ஜெபித்தார் (லூக்கா 23:34). அவர் இந்த ஜெபத்தை ஏறெடுத்தாலும், அவர்கள் மனந்திரும்பாத வரையிலும் அவர்களின் பாவங்களினுடைய குற்றமானது அவர்களின் ஆத்துமாக்களின் மீது நிலைத்திருந்தது (காண்க நடபடிகள் 2:36-38). இயேசு தமது இருதயத்தில் *விரோத உணர்வு* எதையும் கொண்டிருக்கவில்லை என்பதே கருத்தாக உள்ளது. யாரேனும் ஒருவர் எனக்கு துன்பம் விளைவித்தால், அவர் தவறு செய்ததாக ஒப்புக்கொள்ளும் வரையில், அவருடனான எனது உறவுமுறை அனேகமாக மனப்பூர்வமற்றதாகவே இருக்கும், ஆனால் *எனது* இருதயத்திற்குள் (அவரைப் பற்றிய) தீய சிந்தை எதுவும் இராதிருப்பதை நிச்சயப்படுத்திக்கொள்வதே எனது மாபெரும் அக்கறையாக இருக்க வேண்டும். "கசப்பான வேர் முளைத்தெழும்பி" (எபிரெயர் 12:15), *எனது* இருதயத்தை நிரப்பி நான் மற்றவர்கள் மீது கொண்டிருக்க வேண்டிய அன்பை விகாரமாக்கி விடாதபடிக்கு நான் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஜெபத்தின் இப்பகுதி பற்றிய லூக்கா சுவிசேஷ விபரமானது, பின்வரும் நேர்மறையான குறிப்பைக் கொண்டுள்ளது: "நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே" (லூக்கா 11:4ஆ).

நாம் மன்னிக்க மனவிருப்பம் இல்லாதிருந்தால் என்னவாகும்? முதலாவது, அது நமது தற்போதய சந்தோஷத்தை அழிக்கக் கூடும். லேரி கல்வின் என்ற ஆலோசனையாளர், "கசப்புணர்வு நமது ஆவியை அரிக்கிறது, நமது பலத்தை உறிஞ்சுகிறது, நமது பசியை அழிக்கிறது, நமது உறக்கத்தைத் தொந்தரவு செய்கிறது மற்றும் நமது உடல் நலத்தைச் சிதைக்கிறது. மனதில் கசப்புணர்வைக் கொண்டிருத்தல் நமது முகங்களில் சுருக்கங்களை ஏற்படுத்துகிறது, நமது தோள்களை வளைத்துச் சீர்கெடுக்கிறது, நமது வயிறுகளைக் குடல்புண்களால் எரியச் செய்கிறது மற்றும் நமது உதடுகளில் சுளிப்பை வரவழைக்கிறது" என்று எழுதினார்.[19]

இரண்டாவதாக - மற்றும் மிக முக்கியமாக - மன்னிக்க மனவிருப்பமற்று இருத்தல் என்பது நமது நித்திய சந்தோஷத்தை இடர்ப்பாட்டிற்கு உள்ளாக்கக் கூடும் என்ற உண்மை உள்ளது. மாதிரி ஜெபத்தைத் தொடர்ந்து வருகிற, சிந்தனையைத் தூண்டும் இயேசுவின் பின்வரும் வார்த்தைகள் மீது கவனம் செலுத்துங்கள்: "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" (மத்தேயு 6:14, 15). மன்னிக்க மனவிருப்பம் இல்லாத மனிதர், தாம் கடந்து செல்ல வேண்டிய பாலத்தை அழிக்கிறார் என்று கூறப்பட்டுள்ளது.

## இதன் உட்கண்ணோக்கில் மாதிரி (6:13அ)

இந்த ஜெபம் தொடர்ந்து, "எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" என்று கூறுகிறது (வசனம் 13அ;

*காண்க லூக்கா 11:4இ). "சோதனை" என்று மொழிபெயர்க்கப்பட்ட (peirasmos என்ற) கிரேக்க வார்த்தை பல்வேறு அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியும், ஆனால் இந்த வசனத்தில் இது "தீமை" என்ற வார்த்தையுடன் ஒன்றுக்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த சந்தர்ப்பப் பொருளில் இது, "தவறு செய்வதற்கான சோதனை" என்பதைக் குறிக்கிறது. இயேசு தமது சீஷர்களுக்குப் போதிக்கப் பயன்படுத்திய ஜெபமானது அதன் உட்கண்ணோக்கில் மாதிரியாக உள்ளது, ஏனெனில் இது பாவங்களை மன்னித்தல் என்பதைப் பற்றிக் கவனம் செலுத்துவதோடு கூட, பாவத்தை உண்டாக்கும் விஷயங்களில் இருந்து புறம்பே இருத்தல் பற்றியும் கவனம் செலுத்துகிறது.*

*கிரேக்க வசனத்தில், "தீமை" என்ற வார்த்தைக்கு முன்னதாக, திட்டவட்டச் சுட்டுச்சொல் உள்ளது; நேரடி அர்த்தத்தில் இது, "*the* evil" என்று கூறுகிறது.* "The evil [thing]" *(தீமையான ஏதொன்றும்) அல்லது* "the evil [one]" *(பிசாசானவன்) என்பது இதன் அர்த்தமாக இருக்கக் கூடும்.*[20] *தீமை யாவற்றிற்கும் (அதாவது, பாவம் நிறைந்த ஒவ்வொரு விஷயத்திற்கும்) பிசாசானவனே பொறுப்பாளியாக இருப்பதால், இவ்விரு அர்த்தங்களும் ஒரு அடிப்படைச் சிந்தனையையே கொண்டு வருகின்றன.*

*இந்த ஜெபமானது, சோதனையில் இருந்து விலகி இருக்க,*[21] *நமது வழியில் வரும் சோதனைகளைச் சந்திப்பதில் உதவி செய்ய, மற்றும் சாத்தானைத் தோல்வியடையச் செய்வதில் உதவிசெய்யத் தேவனுடைய உதவியைக் கேட்கும்படி நமக்குப் போதிக்கிறது. இது நம்மீது பொறுப்பை வைப்பதாகவும் உள்ளது. மிக அடிக்கடி நாம், நமது கண்களை அகலத் திறந்து வைத்துக் கொண்டே, சோதனை நிறைந்த சூழ்நிலை ஒன்றில் அடியெடுத்து நடந்து சென்றுள்ள பின்பு, அந்த இடர்பாட்டில் இருந்து தேவன் நம்மைக் காப்பாற்ற வேண்டும் என்று விரும்புகிறோம். நாம் "எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல் ..." என்று ஜெபித்துவிட்டு, பின்பு நாம் சோதிக்கப்படுவோம் என்று அறிகிற இடத்திற்கு வேண்டுமென்றே செல்லக் கூடாது.*

## *இதன் துதியில் மாதிரி (6:13ஆ)*

*மாதிரி ஜெபத்தின் நிறைவு வார்த்தைகள் வேதாகமத்தில் அடைப்புக் குறிகளுக்குள் உள்ளன: [ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்] (வசனம் 13ஆ). தொடக்ககாலக் கையெழுத்துப் பிரதிகளில் இந்த முடிவு வார்த்தைகள் காணப்படுவதில்லை. இருப்பினும் சபையின் தொடக்க நூற்றாண்டுகளில் இவ்வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டதற்கான சான்று உள்ளது, இவைகள் பெரும்பான்மையான மொழிபெயர்ப்பு வேதாகமங்களில் ஏதேனும் ஒரு இடத்தில் - அடிக்குறிப்புகளில் அல்லது பக்க ஓரக்குறிப்புகளில் - உள்ளன. இவைகள் இந்த ஜெபத்தை முடிப்பதற்குப் பொருத்தமான வார்த்தைகளாக உள்ளன. இவைகள் சகல நன்மைக்கும் ஊற்றான தேவனை நோக்கித் திரும்புகின்றன:*

- *"இராஜ்யம்" அவருடையதாக உள்ளது. இராஜ்யம் அவருக்கு உரியதாக உள்ளது. அவர் எல்லாவற்றிற்கும் மேலானவராக இருக்கிறார் - இதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.*
- *"வல்லமை" அவருடையதாக உள்ளது. தேவனுடைய வல்லமையோடு*

ஒப்பிடுகையில், மனிதர் கொண்டிருக்கக் கூடிய எந்த வல்லமையும் அற்பமானதாக உள்ளது - இதை நாம் உணர்ந்தறிய வேண்டும்.

- "மகிமை" அவருடையதாக உள்ளது - இதை நாம் அறிவிக்க வேண்டும்.
- இவை யாவும் ''என்றென்றைக்கும்'' உண்மையாக இருக்கும். "ஆமென்."

## முடிவுரை

அதுவே மாதிரி ஜெபமாக உள்ளது. இது ஜெபத்தைப் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டிய எல்லாவற்றையும் நமக்குப் போதிக்கிறதா? இல்லை. எடுத்துக்காட்டாக, இது இயேசுவின் நாமத்தில் ஏறெடுக்கப்படவில்லை. மோசேயின் பிரமாணம் அமலில் இருந்த வேளையில், மாதிரி ஜெபம் உரைக்கப்பட்டது, மற்றும் இது இன்றைய நாட்களின் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்ட எந்த யூதராலும் ஜெபிக்கப்படக் கூடும். புதிய உடன்படிக்கையின்கீழ் நாம், "*நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே*[22] எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரிக்க வேண்டும்" (எபேசியர் 5:20 [என்னால் வலியுறுத்தப்படுகிறது]; மேலும் காண்க யோவான் 16:24 மற்றும் கொலோசெயர் 3:17). மற்றும், மாதிரி ஜெபத்தில் உள்ள வேண்டுகோள் தனது இயல்பில் பொதுவானதாக உள்ளது. பொதுவான ஜெபங்களுக்கான காலமும் இடமும் உள்ளன, ஆனால் நமது ஜெபங்கள் குறிப்பானவையாக இருக்க வேண்டும் என்பது விதியாக உள்ளது, நாம் குறிப்பிட்ட ஆசீர்வாதங்களுக்காக நன்றி செலுத்துவது அவசியமாக உள்ளது. நாம் குறிப்பிட்ட பாவங்களை அறிக்கை செய்வது அவசியமாக உள்ளது. நாம் குறிப்பிட்ட மக்களுக்காக ஜெபிப்பது அவசியமாக உள்ளது. (காண்க கொலோசெயர் 1:3; 1 தெசலோனிக்கேயர் 1:2, 3; 2 தெசலோனிக்கேயர் 2:13; யாக்கோபு 5:16.) இருந்த போதிலும், மாதிரி ஜெபத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் அதிகமாக உள்ளன. ஏற்கனவே குறிப்பிட்டபடி, இது நோக்குதலில், பயபக்தியில், வலியுறுத்தத்தில், அக்கறையில், வரையறையில், தாழ்மையில், உட்கண்ணோக்கில் மற்றும் துதியில் மாதிரியாக உள்ளது.

நாம் இப்பாடத்தை முடிக்கும் இவ்வேளையில், இந்த ஜெபம் ''பரமண்டலங்களிலிருக்கிற *எங்கள் பிதாவே*'' என்று தொடங்குகிறது என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன் (வசனம் 9அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). தேவன் உங்கள் பிதாவாக இராத வரையிலும் நீங்கள் சட்டப்பூர்வமாக இந்த ஜெபத்தை ஜெபிக்க இயலாது. அவர் உங்கள் பிதாவாக *இருக்கிறாரா*? நீங்கள் அவருடைய பிள்ளையாக *இருக்கிறீர்களா*? நீங்கள் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றினால் தேவனுடைய குடும்பத்திற்குள் பிறந்திருக்கிறீர்களா? பவுல், "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் *பற்றும் விசுவாசத்தினால்* தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் *கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள்* எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" என்று எழுதினார் (கலாத்தியர் 3:26, 27; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மனம்வருந்திய விசுவாசி என்ற வகையில் நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருந்தால், தேவனுடைய பிள்ளை என்ற வகையில் நீங்கள் *நடந்திருக்கிறீர்களா* - அல்லது சபையாகிய அவருடைய

*குடும்பத்திற்கு நீங்கள் கெட்டபெயரைக் கொண்டு வந்திருக்கிறீர்களா (1 தீமோத்தேயு 3:15)? நீங்கள் ஞானஸ்நானம் பெறவேண்டியிருந்தால் அல்லது மீளக்கட்டுவிக்கப் படவேண்டியிருந்தால் (காண்க கலாத்தியர் 6:1; நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16), அதை நீங்கள் இன்றே செய்ய வேண்டும் என்பதற்காக நான் ஜெபிக்கிறேன்.*

---

*குறிப்புகள்*

[1]*"Then"* என்ற வார்த்தை, இந்த ஜெபத்தை முந்திய போதனையுடன் பிணைக்கிறது. நாம் அர்த்தமற்ற வகையில் வார்த்தைகளைக் கூறிக் கொண்டிருக்கக் கூடாது (மத்யே 6:7). மாறாக நாம் "இவ்வாறு" ஜெபிக்க வேண்டியுள்ளது. [2]இது தமிழ் வேதாகமத்தில் 68 வார்த்தைகள் உள்ளதைக் குறிக்கிறது. 13ம் வசனத்தின் கடைசிப் பகுதியும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக இது யூகிக்கிறது (இந்தப் பாடத்தின் பிற்பகுதியில் இதன் மீதான குறிப்புகளைக் காணவும்). KJV வேதாகமத்தில், மத்தேயுவின் சுவிசேஷத்தில் 66 வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிரேக்க வசனத்தில், மத்தேயு சுவிசேஷ விபரத்தில் 58 வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டுள்ளன, இதில் 13ம் வசனத்தின் கடைசிப் பகுதி எண்ணப்படவில்லை. [3]இது தமிழ் வேதாகமத்தின்படியானதாகும். KJV வேதாகமத்தில், லூக்கா சுவிசேஷத்தில் 58 வார்த்தைகள் உள்ளது. கிரேக்க வசனத்தில் லூக்கா சுவிசேஷத்தில் 38 வார்த்தைகள் உள்ளன. [4]உண்மையான "கர்த்தரின் ஜெபம்" யோவான் 17ல் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. [5]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 3. [6]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount,* vol. 2 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 60. லாயிட் - ஜோன்ஸ், யாத்திராகமம் 3:5ல் மோசே தமது காலணிகளை அகற்றியதை மறைவாகக் குறிப்பிட்டார். [7]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 344. [8]வரலாற்றில் இருந்து ரோமப்பேரரசு என்று நாம் அறியும் நான்காவது ஆட்சிவகையின்போது இராஜ்யம் நிலைநாட்டப்படும் என்று தானியேல் தீர்க்கதரிசனம் கூறியிருந்தார். [9]J. W. McGarvey, *The New Testament Commentary,* vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., 2006), 64-65. [10]William Barclay, *The Gospel of Matthew,* vol. 1, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 198-99.

[11]"அன்றாடம்" அல்லது "அநுதினம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையைப் பற்றி விளக்கவுரையாளர்கள் அதிகம் கூறுகின்றனர். மிகவும் சாத்தியமான அர்த்தமானது மத்தேயு 6:11ல் உள்ள "இன்று" என்ற சொற்றொடருடன் தொடர்புடையதாக உள்ளது. "நாளை" என்பது சாத்தியமான இன்னொரு அர்த்தமாக உள்ளது. எவ்வகையிலும், உடனடி எதிர்காலத்திற்குத் தேவையானவற்றைக் கேட்கும்படியாகவே நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம். [12]நீங்கள் வாழும் இடத்திற்கு ஏற்றாற்போன்று இதைத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள். [13]D. A. Carson, "Matthew," *The Expositor's Bible Commentary,* vol. 8 (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1984), 171. [14]Maltbie Davenport Babcock, "Give Us This Day Our Daily Bread," *Bartlett's Familiar Quotations,* 12th ed. (Boston: Little, Brown and Company, 1948), 731. [15]*The Analytical Greek Lexicon,* 296. இந்த ஜெபத்தின் நன்கு அறியப்பட்ட பதிப்பு ஒன்று, "மீறுதல்கள்" ("பாவம்" என்ற அர்த்தப்படக்கூடிய ஒரு வார்த்தை)

*என்ற வார்த்தையைக் கொண்டுள்ளது: "எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பது போல எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்."* (John Wallace Suter, *The Book of Common Prayer and Administration of the Sacraments and Other Rites and Ceremonies of the Church* [New York: The Church Pension Fund, 1945], 67.) [16]*லூக்கா, "பாவங்கள்" மற்றும் "கடன்கள்" என்ற வார்த்தைகளை ஒன்றுக்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தினார்.* [17]*இவ்வசனத்தை மத்தேயு 18:23-35 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.* [18]"English Literature: C. S. Lewis" (http://www.anglik.net/lewis.htm; Internet; accessed 13 June 2008). [19]Larry Calvin, *The Power Zone* (Fort Worth: Sweet Publishing, 1995), 95. [20]NKJV *வேதாகமத்தில்* "the evil one" *என்றுள்ளது.*

[21]*தேவன் யாரையும் சோதிப்பதில்லையென்பதால் (யாக்கோபு 1:13), "எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்" என்ற சொற்றொடர், "சோதனைக்குள் வழிநடத்தப்பட்டுவிடாமல் இருக்க எங்களுக்கு உதவி செய்யும்" என்பதைப்போன்று அர்த்தப்பட வேண்டும்.* [22]*"இயேசுவின் நாமத்தினாலே" என்பது நாம் சொல்லும் வார்த்தைகளை மாத்திரம் கொண்டிருப்பதில்லை; இயேசு இப்போது நமது மத்தியஸ்தராயிருக்கிறார் (1 தீமோத்தேயு 2:5) என்ற நமது புரிந்து கொள்ளுதலை அங்கீகரிப்பதாக இருக்கிறது.*